# நடப்பு நிகழ்வுகள்
# CURRENT AFFAIRS

TNPSC,TET,TRB,TNUSRB,RAILWAY

tnpscbooks




## HAND WRITTEN NOTES (தமிழில்)

Copyright Act, 1957

Copyright ©2022 tnpscbooks,

All rights reserved… No part of this publication may be reproduced, distributed or transmitted in any form or by any means, including photocopying or other electronic or mechanical methods, without the prior written permission of the publisher, except in the case of brief quotations embodied in reviews and certain other non-commercial uses permitted by copyright law.

Publisher

INSTAGRAM @tnpscbooks

TELEGRAM @tnpscbooks_official

MARCH (மார்ச்) - 2022 மார்-01

- ரஷ்யாவிற்கு எதிரான தனது விண்ணப்பத்தினை உக்ரைன் சர்வதேச நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது.
- அமெரிக்க அதிபர் ஜோ பிடன் நீதிபதி கேதான்ஜி ப்ரவுன் ஜாக்சனை அமெரிக்க உச்ச நீதிமன்றத்தில் நியமிப்பதற்குப் பரிந்துரை செய்தார்.
- விஜய் மல்லையா, நீரவ் மோடி (மற்றும்) மெகுல் சோக்சி ஆகியோரிடமிருந்து 18,000 கோடி ரூபாய் தொகையானது வங்கிகளால் திரும்பப் பெறப்பட்டுள்ளது.
- உலகளாவிய ஒரு வங்கிக் குழுமமான ஸ்டாண்டர்டு சார்டர்டு, சர்வதேச வான்வழிப் போக்குவரத்துச் சங்கத்துடன் (International Air Transport Association - IATA) இணைந்து உள்ளது.

Insta @tnpscbooks

- உலகப் பொருளாதார மன்றம் தேசிய நகர்ப்புற விவகாரங்களுக்கான கல்வி நிறுவனம் ஆகியவை ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- இராணுவ அதிகாரிகளின் தலைமை அதிகாரி M.M. நரவானே, பெங்களூருவின் வான்குடை மிதவைப் பிரிவின் பயிற்சி மையத்தில் வான்குடை மிதவைப் பிரிவினைச் சேர்ந்த 4 படைப் பிரிவுகளுக்கு குடியரசுத் தலைவரின் வண்ணம் என்ற விருதினை வழங்கினார்.
- 2022 ஆம் ஆண்டின் தேசிய போலியோ தடுப்பு மருந்து வழங்கீட்டுத் தினமானது, பிப்ரவரி 27 ஆம் தேதியன்று வழங்கப்படும்

2

- விசாகப் பட்டினத்தின் கிழக்குக் கடற்படைப் பிரிவானது 2022 ஆம் ஆண்டிற்கான குடியரசுத் தலைவரின் கடற்படை மதிப்பாய்வினை நடத்தியது.

- மத்ஸ்யா 6000 நீர்மூழ்கி வாகனமானது, சமுத்திரயான் என்ற திட்டத்திற்காக 2024 ஆம் ஆண்டில் தயாராக இருக்கும்.

- பாஷா சான்றிதழ் செல்ஃபி (சுயப் புகைப்படம்) என்ற பிரச்சாரமானது கல்வித் துறை அமைச்சகத்தினால் தொடங்கப்பட்டுள்ளது.

Insta @tnpscbooks

- ரஷ்ய நாட்டு சார்பிலான வான்வழி மற்றும் ஏவுகணை தாக்குதல்கள் உக்ரைனைச் சேர்ந்த 70க்கும் மேலான இராணுவத் தளங்களை அழித்துள்ளன.

- மின்ஸ்க் ஒப்பந்தங்கள் என்பவை 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டில் பெலாரஸ் தலைநகர் மின்ஸ்கில் கையெழுத்தாகின.

- ஈரான் நாடானது கைபர் - பஸ்டர் எனப்படும் ஒரு புதிய ஏவுகணையை அறிமுகம் செய்துள்ளது.

- பயஞ்சனா துவாதசி இது மகாபாரத்தில் கிருஷ்ணன் பங்கு பெறும் அத்தியாயத்தை நினைவு கூறும் ஒரு வைணவத் திருவிழாவாகும்.

மார்ச்-02

(3)

- பாகுபாடின்மை தினம் – மார்ச் 01.

இந்த ஆண்டின் கருத்துரு, "ஜன் அவுசதி – ஜன் உப்யோகி" (Jan Aushadhi - Jan Upyogi) என்பதாகும்.

மேலே உள்ள கருத்துரு ஜன் அவுசதி திவாஸ் 2022 – மார்ச் 01 முதல் 07 வரை.

- பனிச்சறுக்கு ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டி 2022

இதில் லடாக் சாரணர் அணியானது சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றது.

- 2022 ஆம் ஆண்டு சர்வதேச சிங்கப்பூர் பளுதூக்குதல் போட்டியில் 8 பதக்கங்களைச் சேர்த்து இந்தியா பெற்றுள்ளது.

- ICICI வங்கியின் முன்னாள் வங்கியாளர் மாதாபி பூரி புச், அஜய் தியாகி என்பவரை அடுத்து இந்தியப் பத்திரங்கள் மற்றும் பரிமாற்ற வாரியத்தின் ஒரு புதிய தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.

Insta @ tnpscbooks

- கொச்சின் சர்வதேச விமான நிலைய நிறுவனமானது கேரளாவின் கண்ணூர் மாவட்டத்திலுள்ள பையனூர் அருகே 12MWp திறனுடைய சூரியசக்தி ஆலையை நிறுவ உள்ளது.

- வெறும் கண்களாலேயே பார்க்கும் அளவில் உள்ள மிகப்பெரிய பாக்டீரியாவினை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

இதற்கு தியோமார்கரிட்டா மேக்னிஃபிகா என்று பெயரிடப்பட்டுள்ளது.

(4)

- விண்வெளியில் 22 செயற்கைக் கோள்களை நிலை நிறுத்துவதற்காக லாங்மார்ச் 8 ஏவு ஊர்தியினை (ராக்கெட்) சீனா விண்ணில் செலுத்தியது.

- சீனாவிற்கு அடுத்தப் படியாக T+1 பங்கு ஒப்பந்தத்தினை படிப்படியாக அமல்படுத்திய 2வது நாடாக இந்தியா மாறியுள்ளது.

- ஐக்கிய இராச்சியத்தில் நடைபெறும் பலதரப்பு வான்படைப் பயிற்சியான கோப்ரா வாரியர் 22 என்ற பயிற்சியில் பங்கு பெறுவதற்கு தனது விமானங்களை அனுப்புவதாக இல்லை என இந்திய விமானப் படை முடிவு செய்துள்ளது.

Insta @ tnpscbooks

- இந்தியாவிலிருந்து பதப்படுத்தப்படாத பழங்களின் ஏற்றுமதியானது மிகப் பெரும் வளர்ச்சியைக் கண்டுள்ளது.

- "வண்டியால் மோதி விட்டு நிற்காமல் சென்றால்" தரவேண்டிய இழப்பீடு ரூ 2 லட்சம்.

- குஜராத் சர்வதேச நிதித் தொழில்நுட்ப நகரில் தனது அலுவலகத்தினைத் திறந்த முதல் பன்னாட்டு முகமை, புதிய மேம்பாட்டு வங்கியாகும். (New Development Bank).

tnpscbooks

மார்ச் - 03

- ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாய் நகரில் நடைபெற்ற (5) மாற்றுத் திறனாளிகளுக்கான உலக வில்வித்தை சாம்பியன்சிப் போட்டியின் தனிநபர் பிரிவில் வெள்ளி வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை பூஜா ஜத்யன் பெற்றுள்ளார்.

Insta @ tnpscbooks

- லச்சித் போர்புகனுடைய 400வது பிறந்தநாளையொட்டி அசாம் முதல்வர் பல நலத் திட்டங்களை அறிவித்திருந்தார்.

- பசுமை இல்ல வாயுவின் உமிழ்வு குறைந்தாலும், அடுத்த 20 ஆண்டுகளில் பருவநிலை மாற்றத்தினால் பல்வேறு இடர்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது.

- ஐக்கிய நாடுகளின் பருவநிலை அறிவியல் குழுமமானது பருவநிலை மாற்றம் நமக்கு அப்பாற்பட்டதாக உள்ளதாகவும் மனிதச் சமூகம் அதற்குத் தயார் நிலையில் இல்லை என்றும் தனது முக்கிய அறிக்கையில் எச்சரித்தது.

- "யிலான் பள்ளம்" இது சீனாவின் குவாங்சியாங் மாகாணத்திலுள்ள யிலான் பகுதியின் வடமேற்கில் கண்டறியப் பட்டது.

- இது பூமியின் மீதுள்ள மிகப்பெரிய மற்றும் 100,000 ஆண்டுகள் பழமையான பள்ளம் ஆகும்.

● "உக்ரைனின் அன்டோனோவ் - 225 சரக்கு விமானம்" எனப்படும் உலகின் மிகப்பெரிய விமானத்தினை ரஷ்யா அழித்தது. (6)

● உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பிற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினின் ஜூடோவின் ஆர்டர் என்ற விருதினை சர்வதேச ஜூடோவின் குழு திரும்பப் பெற்றுள்ளது.

● ரசாசா ஏரி ஆனது, ஈராக் நாட்டின் ஆளுகைக்குட்பட்ட அன்பர் மற்றும் கர்பாலா ஆகிய பகுதிகளுக்கு இடையே அமைந்த மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு ஏரியாகும்.

Insta @ tnpscbooks

● இந்தியா - பெல்ஜியம் ஆகியவற்றுக்கு இடையேயான அரசுமுறை உறவின் 75வது ஆண்டு நிறைவினை நினைவு கூறும் வகையில் ஒரு சிறப்பு சின்னமானது வெளியிடப்பட்டது.

● 2022 ஆம் ஆண்டிற்கான தேசிய அறிவியல் தினத்தன்று சர்வதேச பருவமழைத் திட்ட அலுவலகத்தினை அரசு தொடங்கியுள்ளது.

● உள்ள "உங்களில் ஒருவன்" என்ற புத்தகத்தை காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டனர்.

tnpscbooks

மார்ச்–04

7

- உலக குடிமைப் பாதுகாப்பு தினம் – மார்ச் 01
- பொதுக் கணக்குகள் தினம் 2022 – மார்ச் 02
- உலக வனவிலங்கு தினம் – மார்ச் 03
- குறு, சிறு (ம) நடுத்தர தொழில் நிறுவனங்கள் அமைச்சகத்தின் நினைவுச் சின்ன வாரம் 2022 – பிப்ரவரி 28 முதல் மார்ச் 06 வரை
- உலக செவித் திறன் (கேட்டல்) தினம் – மார்ச் 03
- கர்நாடகாவின் பெங்களூரு நகரில் நடைபெற்ற 8வது புரோ கபடி லீக் போட்டியின் இறுதிப் போட்டியில் தபாங் டெல்லி KC அணி பாட்னா பைரேட்ஸ் என்ற அணியை வீழ்த்தியது.

Insta @ tnpscbooks

- இயற்பியல் பேராசிரியர், தீபக் தார் போல்ட்ஸ்மேன் பதக்கத்தினைப் பெற்ற முதல் இந்தியர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
- உலக வங்கியின் இந்திய இயக்குநரான ஜினாயத் கமல் அவர்மத் சர்வதேச கடன் வழங்கீட்டு முகமையின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர்மத் பன்னாட்டு முதலீட்டு உறுதி முகமையின் (Multilateral Investment Guarantee Agency) செயல் பிரிவின் துணைத் தலைவர் தலைவர் பொறுப்பினை ஏற்றார்.

8

- இந்திய இராணுவத்தின் முன்னாள் தலைவர் தீபம் சட்டர்ஜி "The Millennial yogi : A Modern day Parable about reclaiming one's life" என்ற ஒரு புதியப் புத்தகத்தினை எழுதியுள்ளார்.

- தேனுண்ணுங் கரடி, புலி மற்றும் செந்நாய் ஆகிய விலங்குகள் சாலை கட்டுமானத்தின் காரணமாக உலகளவில் பெரும் பாதிப்பிற்குள்ளாகும் 36 உயர்மட்ட இரைப் பிடிக்குண்ணிகளுள் உள்ளடங்கும்.

- மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சகமானது, சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவின் ஓர் அங்கமாக மார்ச் 01 ஆம் தேதி முதல் சர்வதேச மகளிர் தின வாரத்தினைக் கொண்டாடுகிறது.

Insta @tnpscbooks

- நிதி அயோக் அமைப்பானது, தேசியப் பாலினக் குறியீட்டினை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

- இந்தியாவின் முதலாவது தெரு விலங்குகளுக்கான அவசர ஊர்திச் சேவையானது தமிழகத்தின் சென்னை நகரில் தொடங்கப் பட்டுள்ளது.

- இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்கள், புதுடெல்லியில் உள்ள ராஷ்டிரபதி பவனில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள "ஆரோக்கிய வனத்தினை" திறந்து வைத்தார்.

மார்ச்-05

● பல்கேரியாவின் சோஃபியா நகரில் நடைபெற்ற 73வது ஸ்ட்ராண்ட்ஜா நினைவு குத்துச் சண்டை போட்டியில் இந்தியக் குத்துச்சண்டை வீராங்கனைகளான நிகாத் சரீன் (52 கி.கி) மற்றும் நீது (48 கி.கி) ஆகியோர் தங்கப் பதக்கங்களை வென்றுள்ளனர். (9)

● எகிப்து நாட்டின் கெய்ரோ என்னுமிடத்தில் நடைபெற்று வரும் 2022 ஆம் ஆண்டின் சர்வதேச துப்பாக்கிச் சுடுதல் போட்டிக் கூட்டமைப்பின் உலகக் கோப்பைப் போட்டியின் ஆடவருக்கான 10மீ ஏர் பிஸ்டல் பிரிவில் இந்தியத் துப்பாக்கிச் சுடும் வீரர் சௌரப் சௌத்ரி தங்கப் பதக்கத்தினை வென்றுள்ளார்.

Insta @ tnpscbooks

● 2021 ஆம் ஆண்டில், உலகளவில் அதிகமான மில்லியனர்கள் எண்ணிக்கையினைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் இந்தியா 3 வது இடத்தில் உள்ளது.

● இந்தியாவின் மத்திய வைப்புச் சேவை அமைப்பானது 6 கோடிக்கும் மேலான (60 மில்லியனுக்குச் சமம்) இயக்க நிலையிலுள்ள டீமேட் கணக்குகளைக் கொண்டு உள்ளதாக அறிவித்தது.

● 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தின் சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் வசூலானது ரூ1,33,026 கோடியாக உள்ளது.

(10)

- வடக்கு ஈக்வெடாரின் அடர்மழைக் காடுகளில் மந்தாரைப் பூக்களின் வியக்கத்தக்கப் புதிய இனங்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

- எரிசக்தி செயல்திறன் வாரியமானது, குறைகரிமத் தொழில்நுட்பங்கள் குறித்த தேசியப் புத்தாக்க மாநாட்டினை நடத்துவதன் மூலம் தனது 20 வது நிறுவன தினத்தை கொண்டாடியது.

Insta @ tnpscbooks

- இந்திய விமானப் படையானது ராஜஸ்தானின் ஜெய்சால்மர் நகரில் உள்ள பொக்ரான் தளத்தில் வாயு சக்தி என்ற பயிற்சியை நடத்த உள்ளது.

- அறிவியல் (ம) சுற்றுச்சூழல் மையத்தின் 2022 ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் சுற்றுச்சூழல் நிலை அறிக்கையானது மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவினால் வெளியிடப்பட்டது.

- இந்திய அரசானது பாலியெஸ்டர் துணிகளைக் கொண்டு எந்திரங்களால் தயாரிக்கப் படும் தேசியக் கொடிகளை உற்பத்தி செய்யவும் அவற்றை இறக்குமதி செய்யவும் அனுமதி வழங்கியுள்ளது.

- முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் "நான் முதல்வன்" என்ற திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.

மார்ச்-06

(11)

- தேசிய காந்தல் தினம் – மார்ச் 04

இது ர்ஷ்டிரிய சுரக்சா திவஸ் எனவும் அழைக்கப்படுகிறது.

- தேசியப் பாதுகாப்பு தினம் – மார்ச் 04

இந்திய தேசியப் பாதுகாப்புச் சபை நிறுவப்பட்டதனை நினைவு கூறும் விதமாக ஒவ்வோர் ஆண்டும் இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.

- உலக உடல்பருமன் நெருக்கடியைச் சமாளிப்பதற்காக வேண்டி நடைமுறை சார்ந்த தீர்வுகளை மேம்படுத்துவதற்காக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது. Insta @tnpscbooks

- உலக உடல்பருமன் தினம் – மார்ச் 04

- பணியாளர் மதிப்பேற்ற (பாராட்டு) தினம் – மார்ச் 04

மார்ச் மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமையானது பணியாளர் பாராட்டுத் தினமாக அனுசரிக்கப் படுகிறது.

- மிகப்பெரிய பலதரப்பு சுற்றுச்சூழல் ஒப்பந்தத்தில், 'உலக நெகிழி ஒப்பந்தம்" எனப்படும் ஒரு சட்டப்பூர்வப் பிணைப்பு ஒப்பந்தத்திற்கு 175 நாடுகள் ஒப்புதல் அளித்து உள்ளன.

- வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகமானது சுவச் சர்வேக்சன் திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.

(12)

- மத்திய மீன்வளம் கால்நடை மற்றும் பால்வளத் துறை அமைச்சர் பர்ஷோத்தம் ரூபாலா, சாகர் பரிக்கிரமம் திட்டத்தினைத் தொடங்கி வைக்க உள்ளார்.
- பியூ ஆராய்ச்சி மையமானது சமீபத்தில் இந்த அறிக்கையை வெளியிட்டது.
- புலம்பெயர்ந்தோர் (ம) தாய்நாடு திரும்பியோருக்கான நிவாரணம் மற்றும் மறுவாழ்வுத் திட்டம். 2021-22 முதல் 2025-26 வரையிலான காலகட்டத்திற்கு ஏற்கனவே உள்ள 7 துணைத் திட்டங்களைத் தொடர்வதற்கான முன்மொழிதலுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டு 2 வது நீர்த்தி நீர்வள மாநாட்டினை மத்திய ஜல்சக்தித் துறை அமைச்சர் கஜேந்திர சிங் செகாவத் தொடங்கி வைத்தார்.

Insta @tnpscbooks

- தந்தத்தினாலான 4.5 செ.மீ அளவுடைய செவ்வக வடிவப் பகடையானது கீழடி அகழாய்வின் எட்டாம் கட்ட அகழாய்வின் போது கண்டறியப்பட்டது.
- 2022 ஆம் ஆண்டு நடப்பு நிதியாண்டில் அதிகளவு கடன் பெறும் மாநிலங்களில் தமிழக அரசு முன்னிலை வகிக்கிறது.

tnpscbooks

மார்ச் – 07

(13)

- ஆஸ்திரேலியாவின் சுழற்பந்து வீச்சு நாயகனான ஷேன் வார்ன் தனது 52 வது வயதில் காலமானார்.
- ராஜஸ்தான் மாநில அரசானது தனது 2022-23 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 'ஒட்டகப் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுக் கொள்கையை' அறிவித்துள்ளது.
- ஹோரத் அல்லது 'ஹர (சிவன்) இரவு' ஆனது பொதுவாக மகா சிவராத்திரி என்று அழைக்கப்படுகிறது.
- மத்தியப் பிரதேசத்தில் உள்ள உஜ்ஜைன் நகரம், 10 நிமிடங்களில் 11.71 லட்சம் களிமண் விளக்குகளை (தியாஸ்) ஏற்றி கின்னஸ் சாதனை ஒன்றைப் படைத்துள்ளது.

Insta @ tnpscbooks

- தேசியப் போர் நினைவுச் சின்னத்தின் 3வது ஆண்டு விழா 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி 25 அன்று அனுசரிக்கப்பட்டது.
- 7 வது இந்தியத் தொழில்துறை நீர்வள மாநாடு மற்றும் 9 வது FICCI நீர்வள விருதுகளின் சிறப்பு சான்றாய் (ஜூரி) விருதானது "கங்கையைத் தூய்மைப்படுத்து -வதற்கான தேசியத் திட்டத்திற்கு (NMCG – National Mission for Clean Ganga) வழங்கப்பட்டுள்ளது.

(14)

- திறன்மிக்க ரீதியில் நிர்வகிக்கப்படும் மின்சார வாகன மின்னேற்ற நிலையம்.

ரிலையன்ஸ் இன்ஃப்ரா ஸ்ட்ரக்சர்ஸ் நிறுவனத்தின் துணை நிறுவனமான SES யமுனா பவர் லிமிடெட் (BYPL - BSES yamuna Power Limited) இந்தியாவின் முதலாவது "திறன்மிக்க ரீதியில் நிர்வகிக்கப்படும் ஒரு மின்சார வாகன மின்னேற்ற நிலையத்தினை" புது டெல்லியில் தொடங்கியுள்ளது.

- ஒட்டு மொத்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தித் திறனில் கர்நாடகாவை விஞ்சி, தமிழகம் முதல் இடத்தைப் பெற்றுள்ளதாக புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சகம் கூறியுள்ளது. Insta @ tnpscbooks

- தமிழகத்தில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 12,800 நகர்ப்புற ஆட்சிப் பிரிவுகளின் மாமன்ற உறுப்பினர்கள் (வார்டு கவுன்சிலர்கள்) பதவிப் பிரமாணம் செய்து கொண்டு உள்ளனர்.

- 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை விதிகளில் (கடைகள் மற்றும் பார்களில்) திருத்தம் செய்துள்ளதாக தமிழக மாநில அரசு சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்தது.

tnpscbooks

மார்ச் – 08

- இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் பொது (15) மேலாளராக கேரளாவின் அபய் குருவில்லா பொறுப்பேற்க உள்ளார்.
- ICC மகளிர் கிரிக்கெட் உலகக் கோப்பை – 2022

இது 12 வது ICC மகளிர் கிரிக்கெட் உலகக் கோப்பைப் போட்டியாகும்.

இது நியூசிலாந்து நாட்டில் நடத்தப் பட்டு வருகிறது.

- கோணார்க் கோவில் நகரினை 100% சூரிய நகரமாக மாற்றுவதற்கு ஒடிசா திட்டம் இட்டுள்ளது.
- தனது மாநிலத்தில் வழக்குகளை விசாரிப்பதற்கு மத்தியப் புலனாய்வு அமைப்பிற்குக் கொடுக்கப்பட்ட ஒரு இசைவினை திரும்பப் பெறும் 9 வது மாநிலமாக மேகாலயா மாறிஉள்ளது.

Insta @ tnpscbooks

- உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை 'மிக வன்மையாகக் கண்டிக்கும்' ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்திற்கான வாக்கெடுப்பில் இந்தியா வாக்களிக்கவில்லை.
- ரஷ்யா படையானது உக்ரைனின் சபோரிஜியா அணுமின் நிலையத்தினைக் கைப்பற்றியுள்ளது.

இது ஐரோப்பியாவிலுள்ள ஒரு மிகப்பெரிய அணுமின் நிலையமாகும்.

Instagram Click Here 9578985878 Telegram Click Here

(16)

- சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்ட சவுதி அரேபியா, பிப்ரவரி 22 அன்று முதல்முறையாக தனது நிறுவனத் தினக் கொண்டாட்டங்களை மேற்கொண்டது.
- இந்திய அரசானது சர்வதேசத் தகவல்தொடர்பு ஒன்றியத்துடன் தொகுப்பு நாடு ஒப்பந்தத்தினை மேற்கொண்டுள்ளது.
- 10 நகரங்களில் ஜன் ஔஷதி திவாஸ் நிகழ்வின் ஒரு வாரக் கொண்டாட்டத்தின்போது சுகாதாரப் பாரம்பரிய நடைபயணப் பிரச்சாரமானது மேற்கொள்ளப்பட்டது.
- இந்தியா (ம) நெதர்லாந்து ஆகியவற்றுக்கு இடையிலான அரசுமுறை உறவுகள் நிறுவப் பட்டதன் 75வது ஆண்டு நிறைவானது இந்த ஆண்டு அனுசரிக்கப் பட்டது.

Insta @ tnpscbooks

- அரியலூரில் தங்கம் மற்றும் தாமிரத்தால் ஆன உடைந்த வளையல், ஒரு செங்கலால் ஆன அமைப்பு மற்றும் சீனப் பானை ஓடுகள் ஆகியவை கண்டெடுக்கப்பட்டன.
- ரஷ்யா படைகள், தெற்கு உக்ரைனிலுள்ள ஒரு முக்கியத் துறைமுக நகரத்தினைக் கைப்பற்றி உள்ளன.
- ரஷ்யா படைகளால் கைப்பற்றப்பட்ட முதல் பெரிய நகரம் கெர்சன் ஆகும்.

மார்ச்-09

(17)

- சர்வதேச மகளிர் தினம் – மார்ச் 08

இந்த தினத்தின் கருத்துரு, " நிலையான நாளைக்காக இன்றைய பாலினச் சமத்துவம் "
(Gender equality today for a sustainable tomorrow)
என்பது ஆகும்.

- ஜன் அவுசதி திவாஸ் – மார்ச் 07

இந்த தினத்தின் கருத்துரு, " ஜன் அவுசதி - ஜன் உபயோகி "
என்பது ஆகும்.

Insta @tnpscbooks

- இந்திய மகளிர் கிரிக்கெட் அணித் தலைவர் மிதாலி ராஜ் 6 உலகக் கோப்பைப் போட்டிகளில் பங்கேற்ற முதல் பெண்மணி என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

- "The Queen of Indian Pop : The Authorised Biography of Usha Uthup" என்ற தலைப்பில் பாப் பாடகி உஷா உதுப்பின் வாழ்க்கை வரலாறு வெளியிடப்பட்டது.

- இந்திய எழுத்தாளரும் பத்திரிகையாளருமான அமிதவ் குமார் 'The Blue Book : A Writer's Journal' என்ற புதிய புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.

- சர்வதேச பணமோசடி மற்றும் பயங்கரவாத நிதியுதவிக் கண்காணிப்பு அமைப்பான நிதியியல் நடவடிக்கைப் பணிக் குழுவின் சாம்பல் நிறப் பட்டியலில் (Grey list) ஜூன் மாதம் வரை பாகிஸ்தான் நாட்டின் பெயர் இருக்க வாய்ப்புள்ளது.

tnpscbooks

18

- கைபேசி தகவல் தொடர்பிற்கான உலக அமைப்புகள் சங்கமானது 2022 ஆம் ஆண்டின் உலக கைபேசி மாநாட்டினை ஏற்பாடு செய்துள்ளது.
- இந்திய வனவிலங்கு நிறுவனத்திடம் (WII) மனித - விலங்கு மோதல் தொடர்பான அதிகரித்து வருதல் தொடர்பான வழக்குகள் குறித்த ஒரு அறிக்கையைத் தயாரிக்கும் பொறுப்பு அளிக்கப் பட்டுள்ளது.
- ஆண்டுக்கு 212 சதவீதம் அதிகரிப்பு என்ற அளவில் 2021 ஆம் ஆண்டில் இந்தியா 10 கிகா வாட் திறன் அளவில் சூரிய மின் உற்பத்தி சக்தியை நிறுவியது.
- இந்தியா சுமார் 7 மில்லியன் டன் கோதுமையை ஏற்றுமதி செய்ய உள்ளது.

Insta @ tnpscbooks

- மஹாராஷ்டிராவில் உள்ள எச்-எனர்ஜி நிறுவனத்தின் முனையத்தில் இந்தியா தனது முதல் மிதவைச் சேமிப்பு மற்றும் இயற்கை எரிவாயுவாக்கல் அலகினைப் (floating storage and regasification unit) பெற்றுள்ளது.
- "HANSA - NG" என்ற பயிற்சி விமானம் புதுச்சேரியில் அதன் கடல்சார் சோதனைகளை வெற்றிகரமாக நிறைவு செய்தது.

tnpscbooks

மார்ச் – 10

(19)

- நிதியியல் நடவடிக்கைப் பணிக் குழுவின் (Financial Action Task Force) புதியத் தலைவராக சிங்கப்பூரைச் சேர்ந்த T. ராஜா குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

- MPL யின் 47 வது தேசிய மகளிர் சதுரங்க சாம்பியன்சிப் போட்டியில் 19 வயதான மரியங்கா நுட்பாதி தனது பெண் கிராண்ட் மாஸ்டருக்கான ஒரு இறுதிக் கட்ட விதி முறையையும் நிறைவு செய்துள்ளார்.

- மைக்ரோசாஃப்ட் நிறுவனமானது இந்தியாவில் தனது 4 வது தரவு மையத்தினை தெலுங்கானாவின் ஹைதராபாத் நகரில் அமைக்க உள்ளதாக அறிவித்துள்ளது.

- அசிட்டா புலாரியா ஜலகான்யகே இது இந்தியாவில் புதிதாக கண்டறியப்பட்ட ஒரு கடல்பாசியாகும்.

- "சுவச்சதா, சுவதிந்தா மற்றும் சுலப்" பற்றிய ஒரு விழிப்புணர்வை பரப்பச் செய்வதை இந்நிகழ்வு நோக்கமாகக் கொண்டுள்ளது.

Insta @ tnpscbooks

- பிரதமர் மோடி மகாராஷ்டிராவின் புனே நகரில் அமைக்கப் பட்டுள்ள மராட்டிய போர் வீரர் சத்ரபதி சிவாஜி அவர்களின் சிலையைத் திறந்து வைத்து உள்ளார்.

இது 9.5 அடி உயரம் கொண்டது. 1850 கிலோகிராம் எடையுள்ள துப்பாக்கி உலோகத்தினால் ஆனது.

Instagram Click Here 9578985878 Telegram Click Here

20

- பிரதமரின் ஆத்மநிர்பார் பாரத் திட்டத்தின் ஒரு பகுதியாக 2022-23 ஆம் ஆண்டில் பாதுகாப்பு மற்றும் திறன் பெருக்கத்திற்கான கவச் அமைப்பின் கீழ் 2000 கி.மீ நீள இரயில்வே கட்டமைப்பானது கொண்டு வரப்படும்.

- 2018-19 மற்றும் 2020-21 ஆகிய ஆண்டுகளுக்கான இஸ்பாத் ராஜ்பாஷா விருது விழாவில் தேசிய கனிம மேம்பாட்டுக் கழகமானது முதல் பரிசினைப் பெற்றது.

- இந்திய உலக மன்றத்தின் வருடாந்திர உச்சி மாநாடானது கர்நாடகாவின் பெங்களூரு நகரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

Insta @tnpscbooks

- குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்கள் துறை அமைச்சகமானது பெண்களுக்காக "SAMARTH" எனப்படும் ஒரு சிறப்புத் தொழில்முனைவு ஊக்குவிப்பு இயக்கத்தினைத் தொடங்கியுள்ளது.

- ஸ்வதந்த்ரா சைனிக் சம்மான் யோஜனா மற்றும் அதன் உட்பிரிவுத் திட்டங்களை 2021-22 முதல் 2025-26 வரையிலான நிதியாண்டுகளுக்குத் தொடரச் செய்வதற்கு வேண்டி அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

- தூத்துக்குடி மாவட்டத்தில் அமைக்கப்பட உள்ள இந்தியாவின் முதல் சர்வதேச அறைகலன் பூங்காவிற்கு (furniture Park) ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

மார்ச்-11

21

- புகைப்பிடித்தல் தடை தினம் – மார்ச் 09
- மத்திய தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ், விஷ்வகர்மா ராஷ்டிரிய புரஷ்கர் (ம) தேசியப் பாதுகாப்பு விருதுகளை வழங்கி உள்ளார்.
- இந்திய அரசின் இந்திர தனுஷ் திட்டமானது ஒரு சுகாதார நல முன்னெடுப்பாகும். இத் திட்டமானது முதலில் 2014 ஆம் ஆண்டு டிசம்பர் 15 அன்று தொடங்கப்பட்டது.
- தொழில் முனைவோருக்கு உதவி வழங்கச் செய்வதற்காக ஹரியானா மாநில அரசு, மாத்ருசக்தி உதய்மிதா என்ற திட்டத்தினை அறிவித்துள்ளது. Insta @tnpscbooks
- குஜராத் அரசானது, 2022 ஆம் ஆண்டு மார்ச் 07 அன்று பால் – தத்வல் படுகொலையின் 100 ஆம் ஆண்டு நினைவினை அனுசரித்தது.
- சிக்கிம் முதல்வர் பிரேம் சிங் தமாங், "ஆமா யோஜனா மற்றும் பாகினி திட்டத்தினை" அரசு விரைவில் செயல்படுத்தும் என அறிவித்துள்ளார்.
- சத்தீஸ்கர் முதலமைச்சர் பூபேஷ் பாகேல் "கௌசல்ய மாத்ரித்வ யோஜனா" என்ற திட்டத்தினை அறிமுகம் செய்தார்.
- இந்தியாவின் மிகப்பெரிய சயனநிலையில் உள்ள புத்தர் சிலையானது புத்தகயாவில் கட்டமைக்கப்பட்டு வருகிறது.

- PARAM கங்கை என்பது தேசிய மீத்திறன் கணினித் திட்டத்தின் கீழ் ரூர்க்கியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் நிறுவப்பட்டுள்ள, இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட பெட்டா படி முறையிலான ஒரு மீத்திறன் கணினியாகும் (Petascale supercomputer).

- இந்திய - பசிபிக் பகுதியில் நெகிழிக் கழிவின் மாசுபாட்டினைக் குறைக்கும் ஒரு நோக்கத்துடன் ஆஸ்திரேலியா மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகள் இணைந்து ஒரு கூட்டாண்மையை நிறுவியுள்ளன.

- இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் சக்தி காந்ததாஸ் அவர்கள் "UPI 123 Pay" எனப்படும் சிறப்பம்ச கைபேசிகளுக்காக (feature Phones) வேண்டி ஒரு ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகத்தினை வெளியிட்டார்.

Insta @tnpscbooks

- அசாமிலுள்ள மனாஸ் தேசியப் பூங்கா மற்றும் புலிகள் காப்பகத்தில் உள்ள புலிகள் மற்றும் காண்டாமிருகங்களின் எண்ணிக்கையானது அதிக அளவில் உயர்ந்துள்ளது.

- ராஜீவ் காந்தி கொலைக் குற்றவாளியான AG பேரறிவாளனுக்கு உச்சநீதிமன்றம் ஜாமீன் வழங்கியுள்ளது.

மார்ச்-12

(24)

- இந்தியாவைச் சேர்ந்த ரவீந்திர ஜடேஜா ICC கிரிக்கெட் டெஸ்ட் போட்டிகளில் ஆல்ரவுண்டர்களுக்கான தரவரிசையில் முதல் இடத்திற்கு முன்னேறியுள்ளார்.
- 2041 ஆம் ஆண்டு பருவநிலைப் படைப் பிரிவு அண்டார்டிகா ஆய்வுப்பணியில் இடம் பெறுவதற்கு இந்தியா சார்பாக ஆருஷி வர்மா தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- இராஜஸ்தானுக்கு அடுத்து, அரசு ஊழியர்களுக்கான பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்திய 2வது மாநிலமாக சத்தீஸ்கர் மாறியுள்ளது.

Insta @tnpscbooks

- பிளாஸ்மா கதிர்களின் மின்னணியமுள்ள அறிவியலை அறிவியலாளர்கள் வெளிக் கொணர்ந்துள்ளனர்.
- 107 ஆண்டுகளாக கடலில் மூழ்கி இருந்த மிகப்பெரிய கப்பல் ஒன்றை அறிவியலாளர்கள் கண்டறிந்து படம் பிடித்துள்ளனர்.
- இந்திய அரசிற்குச் சொந்தமான நிறுவனமாக தேசிய நிலப் பணமாக்கல் கழகத்தினை நிறுவுவதற்கு வேண்டி அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டு சர்வதேச தேர்தல் பார்வையாளர் நிகழ்ச்சியினை கிட்டத்தட்ட 32 நாடுகள் (ம) 4 சர்வதேச அமைப்புகளின் தேர்தல் மேலாண்மை அமைப்புகளுக்காக இந்திய தேர்தல் ஆணையம் நடத்தியது.

- 2015 ஆம் ஆண்டில் 4 BBIN நாடுகளில் (வங்காளதேசம், பூடான், இந்தியா (ம) நேபாளம்) கையெழுத்திடப்பட்ட மோட்டார் வாகன ஒப்பந்தமானது இன்னும் செயல்படுத்தப் படாமல் இருந்தது.

- கலாச்சாரத் துறை அமைச்சகம் (ம) ஜவுளித்துறை அமைச்சகமானது "இந்திய கைவினைப் பொருள்கள் / கைத்தறி, கலை (ம) கலாச்சாரத்திற்கான ஜரோக்கா தொகுப்பு" என்ற ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளன.

- ஜனநாயகம் மற்றும் சுதந்திரமான சமூகம் என்பதன் அடிப்படையில் "பகுதியளவு சுதந்திரம் மக்க" நாடாகத் தொடர்ந்து 2 வது ஆண்டாக இந்தியா குறிப்பிடப்பட்டு உள்ளது.

Insta @ tnpscbooks

- குஜராத்தின் ஜாம் நகரில் பாரம்பரிய மருத்துவத்திற்கான உலக சுகாதார அமைப்பின் ஒரு உலக மையத்தினை நிறுவுவதற்கு வேண்டி பிரதமர் மோடி அவர்கள் தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

- உத்திரப் பிரதேசம், பஞ்சாப், உத்தரகாண்ட், கோவா மற்றும் மணிப்பூர் ஆகிய 5 மாநிலங்களில் வாக்கு எண்ணிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பஞ்சாப் மாநிலம் தவிர, இதர மாநிலங்களில் பா.ஜ.க வெற்றி பெற்றுள்ளது.

மார்ச்-13

25

- உலக சிறுநீரக தினம் – மார்ச் 10

இந்த ஆண்டின் கருத்துரு, "Kidney Health for All" என்பதாகும்.

- சர்வதேச பெண் நீதிபதிகள் தினம் – மார்ச் 10
- 53 வது மத்தியத் தொழில்துறைப் பாதுகாப்புப் படை நிறுவன தினம் – மார்ச் 10
- நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் ஃபார்ச்சுன் இந்தியா 2021 ஆம் ஆண்டு ஆண்டின் மிக அதிகாரம் வாய்ந்த 50 பெண்மணிகள் பட்டியலில் முதல் இடத்தைப் பிடித்து உள்ளார்.

Insta @ tnpscbooks

- மத்தியத் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ், "Role of Labour in India's Development" என்ற புத்தகத்தினை வெளியிட்டார்.
- கோஸ்டி சோலார் என்ற நிறுவனமானது, ஸ்ரீராமகிருஷ்ணா அறிவு அறக்கட்டளையுடன் இணைந்து தெற்கு குஜராத்திலுள்ள துகாலா என்ற ஒரு கிராமத்தினை சூரிய சக்தி மயமாக்கும் ஒரு திட்டத்திற்கான அடிக்கல்லினை நாட்டியுள்ளது.

450 KW திறனுள்ள சூரியசக்தி தகடுகள் அமைப்பது இத்திட்டம்.

tnpscbooks



- 2022 ஆம் ஆண்டு தென்கொரியா அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற யூன் சுக் - யோல் அந்நாட்டின் புதிய அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

- இந்திய நீர்வள மேம்பாடு (பிட்ச்- பைலட்) மாதிரி புத்தாக்க நிறுவன மாநாடானது புதுடெல்லியில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தினால் நடத்தப்படுகிறது.

- 2022 ஆம் ஆண்டு புசா கிருஷி விக்யான் மேளாவானது புசா கல்வி நிறுவனத்தின் மேளா மைதானத்தில் மார்ச் 09 முதல் மார்ச் 11 வரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

Insta @tnpscbooks

- 2022 ஆம் ஆண்டிற்கான ஔவையார் விருதினை சமூக சேவகர் கிரிஜா குமார் பாபுவிற்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

- SKOCH என்ற ஆளுகை நிலைமைக்கானத் தரவரிசையில் தொடர்ந்து 2 வது ஆண்டாக ஆந்திரப் பிரதேசம் தனது முதல் இடத்தினைத் தக்க வைத்துள்ளது.

- மும்பையில், ஜியோ உலக மையத்தினை நிறுவ உள்ளதாக ரிலையன்ஸ் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனம் அறிவித்துள்ளது.

மார்ச் - 14



- உலக ரோட்ராக்ட் தினம் — மார்ச் 13

"ரோட்ராக்ட்" என்பது "ரோட்டரி இன் ஆக்சன்" (ரோட்டரிச் சேவை) என்ற கருத்தைக் குறிக்கிறது.

- இணையத் தணிக்கைக்கு எதிரான உலக தினம் - மார்ச் 12

- இத்தாலியில் நடைபெற்ற கிராண்டிஸ்காச்சி கேட்டோலிகா என்ற சர்வதேச ஓபன் செஸ் (சதுரங்கம்) போட்டியில் எஸ். எல். நாராயணன் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

Insta @ tnpscbooks

- ஐசிசி மகளிர் உலகக் கோப்பையில் அதிகப் போட்டிகளுக்கு ஒரு அணித் தலைவராக இருந்து இந்திய அணித் தலைவர் மிதாலி ராஜ் சாதனை ஒன்றைப் படைத்துள்ளார்.

- சோலி சொராப்ஜியின் 92 வது பிறந்தநாளின் போது "Soli Sorabjee : Life and Times" என்ற தலைப்பிடப்பட்ட ஒரு புதிய சுயசரிதை புத்தகம் குறித்து அறிவிக்கப்பட்டது.

- வங்காளதேச சுற்றுச்சூழல் வழக்கறிஞர் ரிஸ்வானா ஹசன், 2022 ஆம் ஆண்டிற்கான சர்வதேச தைரியமிக்க பெண்கள் (IWOC) விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

tnpscbooks



- திரிபுரா அரசானது, தேயிலைத் தொழிலாளர்களுக்காக "முக்கிய மந்திரி சா ஷ்ரமிக் கல்யாண் பிரகல்பா" என்ற ஒரு சிறப்புத் திட்டத்தை அறிவித்துள்ளது.
- இந்திய நாட்டிலேயே சிறுத்தைகளை அறிமுகப்படுத்தும் முதல் மாநிலமாக மத்தியப் பிரதேசம் மாற உள்ளது.
- ஜனநாயக அறிக்கையானது ஸ்வீடன் நாட்டின் கோதன்பர்க் பல்கலைக் கழகத்தில் உள்ள வி-டெம் என்ற நிறுவனத்தினால் வெளியிடப்பட்டது.
- ஆஸ்திரேலியா ராணுவத் தலைவர் லெப்டினன்ட் ஜெனரல் ரிச்சர்ட் பர் நிலப் போர் ஆய்வுகளுக்கான மையத்திற்கு (CLAWS - Centre for Land Warfare Studies) வருகை தந்தார். Insta @ tnpscbooks
- "அளவு மற்றும் பிராந்தியத்தின் அடிப்படையில் இந்தியாவில் இருந்து, ஆறு விமான நிலையங்கள் சிறந்த விமான நிலையங்கள் பட்டியலில்" இடம் பெற்றுள்ளன.
- நீதிபதி (ஓய்வு) A.K. சிக்ரியை சார்தாம் திட்டத்தின் (பத்ரிநாத், கேதார்நாத், கங்கோத்ரி, யமுனோத்ரி) உயர் அதிகாரக் குழுவின் தலைவராக இந்திய உச்ச நீதிமன்றம் நியமித்துள்ளது.

Instagram Click Here 9578985878 Telegram Click Here

Mar-15

29

- நதிகளுக்கான சர்வதேச நடவடிக்கை தினம் – மார்ச் 14
- சர்வதேச கணித தினம் – மார்ச் 14

π எனும் கணித மாறிலியின் மதிப்பை 3.14 எனக் குறிப்பிடலாம் என்பதால் இத்தினம் π (பை) தினம் எனவும் அழைக்கப்படுகிறது.

- ISSF உலகக் கோப்பை 2022 கெய்ரோவில் நடைபெற்றது. இதில் இந்தியா முதலிடம் உள்ளது.

இது சர்வதேசத் துப்பாக்கிச் சுடுதல் கூட்டமைப்பினால் நடத்தப்பட்டது.

Insta @tnpscbooks

- அர்மாண்ட் டுப்லான்டிஸ் “மான்டோ” டியூப்லான்டிஸ் 6.19 மீட்டர் உயரம் தாண்டி தனது உலகச் சாதனையை ஒரு சென்டி மீட்டர் வித்தியாசத்தில் முறியடித்தார். இவர் ஸ்வீடனின் ஒலிம்பிக் போல் வால்ட் சாம்பியன் ஆவார்.

- இந்திய ஷட்டில் (பூப்பந்தாட்ட வீரர்) வீரர் லக்சயா சென், ஜெர்மன் ஓபன் சூப்பர் 300 போட்டியின் உலக முன்னணி ஆட்டக்காரர் விக்டர் அக்செல்சனை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குத் தேர்வாகியுள்ளார்.

- கொலைகள் முதல் தீவிரவாதக் குழுக்களைச் சேர்த்தல் வரையிலான குற்றங்களில் ஈடுபட்ட 81 குற்றங்களுக்கு (அ) தீவிரவாதிகளுக்கு மரணத் தண்டனை விதிக்கப் பட்டது. சவுதி அரேபியா.

- ராஷ்டிரிய ரக்சா என்ற பல்கலைக்கழகத்தினைத் பிரதமர் மோடி திறந்து வைத்தார்.

● பிளாஸ் அமைப்பு இந்தியாவின் பள்ளிக் கல்வி பற்றிய 2020-21 ஆம் ஆண்டிற்கான கல்விக்காக ஒருங்கிணைக்கப்பட்ட மாவட்ட அளவிலான ஒரு தகவல் என்ற அறிக்கையானது சமீபத்தில் வெளியிடப்பட்டது. (30)

● வில்வடிவப் பாலமானது – ஆலப்புழாவினையும் கொல்லத்தினையும் இணைக்கும் தென்னிந்தியாவின் நீளமான வில்வடிவப் பாலம்.

Insta @ tnpscbooks

இது வலியழிக்கல் என்னுமிடத்தில் திறக்கப்பட உள்ளது.

● ஜன் அவுசதி திவாஸ் வாரக் கொண்டாட்டத்தின் 3 வது நாளான மார்ச் 14 அன்று நாடு முழுவதும் 75 இடங்களில் ஜன் அவுசதி பால் மித்ரா நிகழ்ச்சியானது நடத்தப்பட்டது.

● சாகித்திய அகாடமியின் "சாகித்யோத்சவ்" என்றழைக்கப்படும் ஒரு கடிதத் திருவிழா என்பது இந்தியாவின் மிக உள்ளார்ந்த ஒரு இலக்கியத் திருவிழாவாகும்.

● மக்களவைச் செயலகத்துடன் இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு துறை அமைச்சகம் இணைந்து 3வது தேசிய இளையோர் பாராளுமன்ற விழாவினை ஏற்பாடு செய்துள்ளன.

● மத்திய எரிசக்தித் துறை அமைச்சர் R.K. சிங் மெய்நிகர் திறன்மிகுக் கட்டுப்பாட்டு அறிவு மையம் மற்றும் புத்தாக்கப் பூங்காவினைத் திறந்து வைத்தார்.